**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 164/2022**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 – ஆரோக்கிய ஸ்டீபன் ராஜ் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 06.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1) தாவா சொத்திற்கு பாதை எந்த திசையில் உள்ளது என்றால் வடபுறம் உள்ளது. அது வண்டிப்பாதை ஆகும். நான் தாக்கல் செய்த அ.வ.எண்,65/2023 வழக்கில் தாவா சொத்தின் வடபுறம் வண்டிப்பாதை காட்டவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விபரம் தவறாக உள்ளதால் நான் தாக்கல் செய்த அ.வ.எண்.65/2023 வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வடபுறம் உள்ள பாதை எங்களுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட பாதை ஆகும். எனது வழக்குரையில் வடபுறம் எங்களுக்கு பாத்தியப்பட்ட வண்டிப்பாதை இருப்பதாக கூறியிருக்கிறேனா என்றால் இல்லை. உண்மையில் மேற்படி பாதை எங்களுக்கு பாத்தியப்பட்டதாக இருந்திருந்தால் அதை வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றும், சொத்து விபரம் தவறானது என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

2) எத்தனை ஆழ்துளை கிணறு தாவா சொத்தில் உள்ளது என்றால் 2 உள்ளது. எந்த மாதம், வருடம் மேற்படி ஆழ்துளை கிணறு அமைத்தேன் என்றால் 2022–2023 வருடத்திற்குள் அமைத்தேன். எந்த மாதத்தில் அமைத்தேன் என்றால் ஞாபகமில்லை. எனது வழக்குரையில் மேற்படி ஆழ்துளை கிணற்றை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது வழக்குரையில் எத்தனை ஆழ்துளை கிணறு உள்ளது என சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வழக்கு சொத்து விபரத்தில் ஆழ்துளை கிணற்றை குறிப்பிடாததால், அது தாவா சொத்தில்தான் உள்ளது என குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரிதான். 2022 ம் வருடத்தில் குமரன் எனக்கு எதிராக

வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஆழ்துளை கிணறு அமைக்க நீதிமன்றத்தில் அனுமதி வாங்கினேனா என்றால் இல்லை.

3) பொதுவாக வழக்கு நிலுவையில் உள்ள போது, அந்த வழக்கு சொத்தில் எந்தவித மாற்றமோ அல்லது அபிவிருத்தியோ செய்யக்கூடாது என்றால், எனது நிலத்தில்தான் நான் ஆழ்துளை கிணறு போட்டேன். ஆழ்துளை கிணறு போட்டபோது வாதி குமரன் என்னிடம் பிரச்சினை செய்ததாக சொல்லப்படும் தேதி தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. வழக்கு பற்றிய விபரங்களை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். எனது வழக்குரையில் தாவா சொத்து பற்றுகை செய்ததன் அடிப்படையில் பாத்தியம் என்றும், அனுபவ பாத்தியம் உள்ளது என்றும், எதிரிடை அனுபவ உரிமைபடி பாத்தியம் என்றும், எனது தந்தை எங்களுக்கு கொடுத்ததன் அடிப்படையில் பாத்தியம் என்றும் கூறியுள்ளேன் என்றால், எனது பாட்டனார் சொத்து, நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம்.

4) தாவா இடத்தை அளவீடு செய்ய யார் பெயரில் விண்ணப்பம் பி.சா.ஆ.7 செய்தேன் என்றால் எனது தந்தை பெயரில் செய்தேன். நான், எனது தந்தை மற்றும் தாய் அனைவரும் ஒன்றாகத்தான் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து கொண்டு தாவா இடத்தை வாதிக்கு கிடைக்க விடாமல் செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8 ல் எனது பெயர் இல்லை என்றும், மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து 1429, 1430 பசலியில் தரிசாக உள்ளது என இருப்பதால், நான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது வழக்கின் வழக்குமூலத்தில் வாதியும், வாதியின் கிரையதாரர்களும் செய்து கொண்ட கிரைய ஆவணங்களைப் பற்றி எனக்கு எப்போது தெரியும் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) பி.சா.ஆ.3 அறிவிப்பில் தாவா சொத்து எங்களுக்கு அனுபவ பாத்தியத்தின் அடிப்படையில் சுவாதீனத்தில் இருப்பதாக மட்டும்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணத்தில் வாதி குமரன் மற்றும் அவர்களது கிரையதாரருக்கு எதிராக எந்த ஒரு குற்றச்சாட்டும் குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணத்தில் குமரன் மற்றும் அவரது கிரையதாரருக்கு எதிராக அவர்களது கிரையம் மோசடியானது என குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், வாதி தாக்கல் செய்த அ.வ.எண்.164/2022 வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணத்தில் வாதியின் கிரைய ஆவணத்தைப் பற்றி எனக்கு எப்போது தெரியும் என குறிப்பிட்டு தேதி சொல்லாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

6) பி.சா.ஆ.3 ஆவணம் அனுப்பிய பின்னிட்டு வருவாய்துறைக்கு அறிவிப்பு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்க எனக்கு கால அவகாசம் இருந்தும் அவ்வாறு 7 முதல் 9 பிரதிவாதிகளுக்கு உரிய அறிவிப்பு அனுப்பாமல் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் ஆழ்துளை கிணறை பி.சா.ஆ.3 அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டு போட்டேனா என்றால் சரியாக ஞாபகமில்லை, ஆனால் குமரன் பிரச்சினை செய்த பின்னிட்டுதான் ஆழ்துளை கிணறு போட்டேன். மற்றொரு ஆழ்துளை கிணறு போடும்போது குமரன் என்னிடம் பிரச்சினை செய்தார். நான் சொல்வது போல வாதி என்னிடம் எந்த பிரச்சினையும் செய்யவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி குமரனைத்தவிர வேறு யாரும் என்னிடம் பிரச்சினை செய்யவில்லை என்றால் சரிதான்.

7) எதிரிடை அனுபோக உரிமை கோரியுள்ள நிலையில் அதற்கான தகுந்த நீதிமன்ற கட்டணத்தை செலுத்தி உரிய பரிகாரம் கேட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு கேட்காததால் எனது வழக்கு 65/2023 தள்ளுபடி செய்யப்பட

வேண்டும் என்றால் சரியல்ல. அ.வ.எண்.164/2022 வழக்கில் வாதி குமரன் எந்த பிரச்சினையும் செய்யவில்லை என்றும், தற்போதுவரை அவர்தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை தகுந்த மறுபயன் செலுத்தி நல்ல எண்ணத்துடன் கிரையம் செய்துள்ளதால் அவருக்குத்தான் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றும், எனக்கு எவ்வித உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. எனக்கு உண்மையில் பற்றுகையின் அடிப்படையில் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால், சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் ஆட்சேபனை தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல.

8) நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை செய்திருந்தால் குமரன் கிரையம் பெற்றிருக்க மாட்டார் என்றும், அவ்வாறு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதல் அவர் தகுந்த மறுபயன் கொடுத்து நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. நான் பி.சா.ஆ.3 அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு வரை சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த அ.வ.எண்.164/2022 வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும், நான் தாக்கல் செய்த அ.வ.எண்.65/2023 வழக்கு குமரனின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**